



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387

உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR

www.anandabhaskar.com






சென்னை மலர்: 01 இதழ்: 142 17.11.2025 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 142 Monday pages 4 Rs.5/-


## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(17-11-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-1

பிறை: தேய்பிறை

திதி
துவாதசி காலை 6.53 வரை
பிறகு திரயோதசி

நட்சத்திரம்:
சித்திரை (முழுவதும்).

யோகம்
சித்தயோகம்

ராகுகாலம்
காலை 7.30 – 9.00 மணி

எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.

சூலம் –கிழக்கு.

நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | உயர்வு |
| ரிஷபம் | தனம் |
| மிதுனம் | அன்பு |
| கடகம் | அமைதி |
| சிம்மம் | பணிவு |
| கன்னி | நட்பு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | புகழ் |
| தனுசு | சுகம் |
| மகரம் | ஆதரவு |
| கும்பம் | நிறைவு |
| மீனம் | செலவு |

## டெல்லி செங்கோட்டையில்

# கார் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் துப்பாக்கி தோட்டாக்கள் கண்டெடுப்பு

**டெல்லி,நவ.17:**

டெல்லிசெங்கோட்டையில் கடந்த 10-ந்தேதி கார் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். 27 பேர் காயம் அடைந்தனர். காரில் வெடிபொருட்கள் நிரப்பி தற்கொலை தாக்குதல் நடத்திய டாக்டர் உமர் முகமது பலியானார்.

ஜம்மு-காஷ்மீரின் புல்வாமாவைச் சேர்ந்த உமர், அரியானாவின் பரிதாபாத்தில் உள்ள அல் பலாஹ் பல்கலைக்கழகத்தில் டாக்டராக பணியாற்றி வந்தார். பரிதாபாத்தில் இருந்து 3 டாக்டர்கள் உள்பட 8 பேர் கைது செய்யப்பட்டு 2,900 கிலோ வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு டெல்லியில் குண்டுவெடிப்பு நடந்தது.

இதற்கிடையே உமரின் கூட்டாளிகளிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது. இதில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில் விசாரணையில் புதிய தகவல்கள் வெளியாகி உள்ளது. டாக்டர் உமர், டெல்லியில் குண்டுவெடிப்புக்கு ஒரு நாள் முன்பு வரை அரியானாவின் நூஹ் நகரில் வாடகை அறையில் தங்கி இருந்தார் என்பது தெரிய வந்துள்ளது.

அப்போது அவர் பல செல்போன்களைப் பயன்படுத்தி உள்ளார் என்று தெரிவித்தனர்.



அவரது நெருங்கிய கூட்டாளி டாக்டர் முசாம்மில் ஷகீல்லை போலீசார் பிடித்ததை அறிந்ததும் உமர் பரிதாபாத்தில் உள்ள அல்-பலாஹ் மருத்துவக் கல்லூரியை விட்டு வெளியேறியதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

மேலும் டெல்லியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட குண்டு, அல் பலாஹ் பல்கலைக் ழகத்தில் தயாரிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

புல்வாமாவின் கோய்ல் கிராமத்தில் உள்ள உமரின் வீடு பாதுகாப்பான முறையில் வெடி வைத்து தகர்க்கப்பட்டது. முழு வீடும் தரைமட்டமானதை அடுத்து, கட்டட இடிபாடுகளில் தடயவியல் துறையினர் ஆய்வு செய்தனர். இதில் உமர் வெடிபொருட்களை சோதிக்க வீட்டில் ஆய்வகம் வைத்திருந்ததும், டெல்லியில் குண்டுவெடிப்பு நடத்த சோதித்து பார்த்து இருப்பதும் தெரியவந்தது.

டாக்டர் உமர் சட்ட விரோத நிதிகள் மூலம் ரூ.20 லட்சம் பெற்றதாக தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக பல ஹவாலா வியாபாரிகளிடம் விசாரணை நடந்து வருகிறது. மேலும் உமர் அரியானாவின் நூஹ் நகரில் உள்ள ஒரு சந்தையில் பணம் கொடுத்து அதிக அளவில் உரங்களை வாங்கியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாகவும் விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில் டெல்லியில் கார் குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் இருந்து 9மிமீ தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்படவில்லை.

பறிமுதல் செய்யப்பட்ட 3 தோட்டாக்களில் ஒன்று மட்டும் வெற்று ஷெல் ஆகும். இந்த 9 மிமீ தோட்டாக்கள் பொதுவாக பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையினரால் பயன்படுத்தப்படுகின்றன.

இதையடுத்து சம்பவ இடத்தில் இருந்த அனைத்து பாதுகாப்பு படையினர் மற்றும் போலீசார் ஆயுதங்களிலும் பயன்படுத்தப்பட்ட தோட்டாக்கள் ஆய்வு செய்யப்பட்டது. இதில் அவர்களின் தோட்டாக்கள் சரியாக இருந்தது.

எனவே குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் பறிமுதல் செய்யப்பட்ட தோட்டாக்கள் பாதுகாப்பு படையினர், போலீசாருக்கு சொந்தமானவை அல்ல என்பது உறுதியானது. இதையடுத்து இந்த தோட்டாக்கள் யாருடையது? என்றும் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் தோட்டாக்கள் எப்படி வந்தது? என்பது குறித்தும் விசாரணை நடந்து வருகிறது.

டெல்லி கார் குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணையில் மேலும் முக்கிய ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. குண்டு வெடிப்புக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு பரிதாபாத் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பழைய டெல்லி வரை உமரின் பயணத்தின் புதிய தெளிவான படங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

டெல்லி-என்.சி.ஆரில் உள்ள பல மாவட்டங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய சோதனைச் சாவடி களில் உள்ள 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்களில் இருந்த காட்சிகள் மூலம் இந்த படங்கள் எடுக்கப்பட்டு உள்ளன.

## சம்பா பயிர்க் காப்பீடு நவ.30 வரை கால நீட்டிப்பு!





**சென்னை,நவ.17:**

சம்பா நெற்பயிர்க்காப்பீட்டிற்கான காலவரம்பு நவம்பர் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை சம்பா நெற்பயிரை காப்பீடு செய்யாத விவசாயிகள் மட்டும் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் காப்பீடு செய்யவும் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது, விவசாயிகள் சம்பா நெற்பயிரை முழு வீச்சில் சாகுபடி செய்து வருகின்றனர்.

இதுவரை 26.25 லட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நாள் வரை, 6.27 லட்சம் விவசாயிகளால் 15 லட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த சாகுபடி பரப்பில் 57 சதவீதமாகும். இதே நாளில் கடந்த வருடம் 10 லட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், சேலம், திருப்பூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தேனி, ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சிவகங்கை, கடலூர், திருவள்ளூர் மற்றும் ஈரோடு ஆகிய 27 மாவட்டங்களில் சம்பா நெற்பயிரை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி 2025 நவம்பர் 15ஆம் தேதி என அறிவிக்கை செய்யப்பட்டது.

எனினும் பல மாவட்டங்களில் தொடர் மழையின் காரணமாக குறுவை நெல் அறுவடை மற்றும் சம்பா நெல் நடவு பணிகள் தாமதமானதாலும், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்த பணிகளில் கிராம நிர்வாக அலுவலர்கள் ஈடுபட்டுள்ளதால் அடங்கல் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க, விடுபட்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கிணங்க சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 2025 நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

முதல்வர் ஸ்டாலினின் துரித நடவடிக்கையின் பேரில் சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் செய்யும் விவசாயிகளின் நன்மையை கருதி பயிர் காப்பீடு செய்யும் காலக்கெடுவானது நவம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே வேளாண்மைத் துறை அலுவலர்கள் தத்தம் பகுதிகளில் உள்ள விவசாயிகளை அணுகி பயிர் காப்பீடு செய்திடும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், இதுவரை சம்பா நெற்பயிரை காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நவம்பர் 30ம் தேதிக்குள் பதிவு செய்து பயனடையுமாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

## தேசிய பத்திரிகை நாள்: முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை,நவ.17:**



இந்திய பத்திரிகை கவுன்சில் (பிசிஐ) நிறுவப்பட்ட நவம்பா 16-ஆம் தேதி ஆண்டுதோறும் தேசிய பத்திரிகை நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி நாடு முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களுக்கு பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய சமூக வலைதளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"எந்த ஒரு மக்களாட்சியிலும், தன்னாட்சி அமைப்புகள் அதிகாரத்தில் உள்ளவர்களால் கைப்பற்றப்பட்டாலும், ஊடகம்தான் மக்களாட்சியை உயிர்ப்போடு வைத்திருக்கும் ஆற்றலாக விளங்க வேண்டும்.

மத்திய பா.ஜ.க. அரசின் எதேச்சாதிகாரத்துக்கு அடிபணியாமல் துணிவுடன் அவர்களது தோல்விகளையும் ஊழல்களையும் மோசடிகளையும் தோலுரிக்கும் ஊடகவியலாளர்கள் அனைவரையும் தேசிய பத்திரிகையாளர் நாளில் பாராட்டுகிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் அவருடைய பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# எஸ்ஐஆர்-க்கு எதிராக தவெக ஆர்ப்பாட்டம்




**சென்னை,நவ.17:**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக சென்னையில் தவெக சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.

தமிழகத்தில் கடைசியாக தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட 2002, 2005-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் இப்போது தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பணிக்காக தேர்தல் ஆணையத்தால் பிரத்யேக கணக்கீட்டுப் படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான படிவத்தை வாக்குச்சாவடி அலுவலர்கள் கடந்த 4ஆம் தேதி முதல் வீடு வீடாகச் சென்று வழங்கி வருகின்றனர்.

இதனிடையே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு திமுக கூட்டணிக் கட்சிகள், தவெக உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் இதனைக் கண்டித்து தவெக சார்பில், மாவட்டத் தலைநகரங்களில் ஞாயிற்றுக்கிழமை (நவ.16) ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சென்னை சிவானந்தா சாலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த் மற்றும் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சத்தீஸ்கர்: என்கவுன்டரில் 3 நக்சல்கள் சுட்டுக்கொலை

**பெஜ்ஜி,நவ.17:**

சத்தீஸ்கர் மாநிலம், பெஜ்ஜி மற்றும் சிந்தகுபா காவல் நிலையப் பகுதிகளுக்கு இடையே உள்ள காட்டு மலைகளில் நக்சல்கள் நடமாட்டம் குறித்த தகவல் கிடைத்ததையடுத்து மாவட்ட ரிசர்வ் காவல் படை குழுவினர் தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

அப்போது நடந்த துப்பாக்கிச்சண்டையில் 3நக்சல்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

காவல் கண்காணிப்பாளர் கிரண் சவான் கூறுகையில், இதுவரை, மூன்று நக்சலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை நடந்து வருகிறது என்று தெரிவித்தார்.

சத்தீஸ்கரில் இந்த ஆண்டு இதுவரை நடந்த என்கவுன்டரில் 262 நக்சல்கள் கொல்லப்பட்டுள்ளனர்.




# புயல் சின்னம்: 7 மாவட்டங்களுக்கு இன்று மிக கனமழை எச்சரிக்கை!

**சென்னை,நவ.17:**

தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதால், தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 7 மாவட்டங்களுக்கு இன்று (நவ.17) மிக கனமழைக்கான 'ஆரஞ்சு' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் இலங்கை மற்றும் அதையொட்டிய தென்மேற்கு வங்கக் கடலில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக சனிக்கிழமை (நவ.15) காலை இலங்கைகடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது.

இதன் காரணமாக, ஞாயிற்றுக்கிழமை நவ. 16 முதல் நவ. 22- ஆம் தேதி வரை கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

இன்று(நவ. 16) கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள், காரைக்காலில் மிக கனமழைக்கான 'ஆரஞ்சு' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



விழுப்புரம், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழைக்கு வாய்ப்புள்ளது.

இன்று(நவ. 17) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருவாரூர் நாகப்பட்டினம் மற்றும் காரைக்காலில் மிக கனமழை பெய்வதற்கான 'ஆரஞ்சு' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சட்டமன்ற தேர்தலில் திமுக - காங்கிரஸ் கூட்டணி உறுதி



சென்னை, நவ.17: தமிழகத்தில் திமுக கூட்டணியில் தொடர்வதை காங்கிரஸ் கட்சி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. தவெக பக்கம் காங்கிரஸ் செல்லும் என கூறப்பட்ட நிலையில் திமுக கூட்டணியில் தொடர்வதாக செல்வபெருந்தகை விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து செல்வபெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில், "பீகார் மாநிலத்தைப் போல தமிழ்நாட்டிலும் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று சிலர் ஆருடம் கூற ஆரம்பித்திருக்கிறார்கள்.

பீகார் மாநில தேர்தலை பொறுத்தவரை அங்கு வாக்காளர் பட்டியலில் நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்தத்தின் காரணமாக 65 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டதை எதிர்த்து மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்களும், ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் தேஜஸ்வி யாதவ் அவர்களும் இணைந்து 16 நாட்கள் பீகார் மாநிலத்தில் வாகன அணிவகுப்பு மூலமாக பரப்புரை மேற்கொண்டார்கள். இந்த பின்னணியில் பீகார் மாநிலத்தில் தொகுதி பங்கீடு செய்யப்பட்டு தேஜஸ்வி யாதவ் அவர்களை முதலமைச்சராக இந்தியா கூட்டணி சார்பாக அறிவிக்கப்பட்டது. தேர்தல் வெற்றி வாய்ப்புகள் நிச்சயமாக இந்தியா கூட்டணிக்கு சாதகமாக அமையும் என்று நாடே எதிர்பார்த்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் யாருமே எதிர்பார்க்காத வகையில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது.

கடந்த 2005 முதல் 20 ஆண்டுகளாக முதலமைச்சராக இருக்கிற நிதிஷ்குமார் மீண்டும் வெற்றி பெறுவதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லாத நிலையில் பா.ஜ.க. கூட்டணியின் வெற்றி எப்படி சாத்தியமாயிற்று என்று அரசியல் வல்லுநர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். பீகாரில் மொத்த மக்கள் தொகையில் 33.76 சதவிகிதம் பேர் வறுமை கோட்டிற்கு கீழே வாழ்ந்து வருகிறார்கள். பீகாரில் உள்ள குடும்பங்களில் 64 சதவிகிதம் பேர் மாதம் ரூபாய் பத்தாயிரத்திற்கும் குறைவாக வருவாய் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேலையில்லா திண்டாட்டம் 10.8 சதவிகிதமாக பீகாரில் தலைவிரித்தாடி வருகிறது. ஏறத்தாழ 3 கோடி பேர் பீகாரில் இருந்து புலம் பெயர்ந்து தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் வேலை செய்து பிழைத்து வருகிறார்கள். இத்தகைய அவலநிலைக்கு பீகார் மாநிலத்தை கொண்டு சென்ற பா.ஜ.க. கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்க எந்தவித நியாயமான காரணங்கள் இல்லை என்று உறுதியாக கூற முடியும். ஆனால் வெற்றி வாய்ப்ப எப்படி ஏற்பட்டது ?



இந்திய தேர்தல் ஆணையர்கள் நியமனத்திற்காக அமைக்கப்பட்ட தேடுதல் குழுவில் இருந்து 2023 இல் இந்திய தலைமை நீதிபதியை நீக்கி விட்டு பிரதமர், மத்திய அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் என்று மாற்றியமைத்தார்களோ அன்றைக்கே இந்திய தேர்தல் ஆணையம் மோடி - அமித்ஷாவின் கூட்டணிக்குள் ஐக்கியமாகி விட்டது. இந்த பின்னணியில் தான் கடந்த காலங்களில் வாக்குத் திருட்டு மூலமாக மகாராஷ்டிரா, அரியானா போன்ற மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றது. அத்தகைய உத்தியை தான் பீகாரிலும் பின்பற்றி வெற்றி பெற்றிருக்கிறார்கள். பீகார் வெற்றி என்பது மோடி-அமித்ஷா-கெய்னேஷ்குமார் கூட்டணியினால் விளைந்ததே தவிர, மக்கள் வாக்களித்து பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறவில்லை.

பீகார் சட்டமன்றத் தேர்தல் அக்டோபர் 6 ஆம் தேதி அறிவிப்பதற்கு முன்பாக செப்டம்பர் மாதத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் போது 1.21 கோடி பெண்களுக்கு தலா ரூபாய் 10,000 விநியோகம் செய்யப்பட்டது. இதை எதிர்த்து தேர்தல் ஆணையத்திடம் முறையிட்ட போது, அதனை தடுத்து நிறுத்த மறுத்து விட்டது. ஆனால், தெலுங்கானா, ஜார்கண்ட் மாநிலத்தில் இத்தகைய திட்டங்களை தேர்தல் ஆணையம் அனுமதிக்கவில்லை. பெண்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய் 10,000 வாக்குகளுக்காக கொடுக்கப்பட்டது லஞ்ச பணமாகத் தான் கருத வேண்டும். இது வெற்றிக்கான மிக முக்கிய காரணமாகும்.

நடைபெற்ற பீகார் சட்டமன்றத் தேர்தலில் 20.6 சதவிகித வாக்குகளை பெற்று 89 இடங்களில் பா.ஜ.க.வும், 20.3 சதவிகித வாக்குகளை பெற்று 85 இடங்களில் ஐக்கிய ஜனதா தளமும் வெற்றி பெற்றது. ஆனால், 23 சதவிகித வாக்குகளை பெற்ற ராஷ்டிரிய ஜனதா தளம் 25 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. இன்றைக்கும் தனிப்பெரும் கட்சியாக ராஷ்டிரிய ஜனதா தளம் விளங்கினாலும் 2020 சட்டமன்றத் தேர்தலில் 15.39 சதவிகித வாக்குகளை பெற்று 43 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றிருந்த ஐக்கிய ஜனதா தளம் தற்போது 85 இடங்களில் எப்படி வெற்றி பெற முடிந்தது என்பது கடுமையான சந்தேகத்திற்கு உரியதாகும். இதில் தேர்தல் ஆணையத்தின் சதி இருப்பதை அனைவரும் உறுதி செய்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையில் காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கடந்த 2019 மக்களவை தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2024 மக்களவை தேர்தல் ஆகியவற்றில் அமோக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை மதச்சார்பின்மை, சமூகநீதி ஆகிய கொள்கைகளுக்காகவும், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற நோக்கத்திலும் இந்தியா கூட்டணி வெற்றிக் கூட்டணியயாக செயல்பட்டு வருகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் தமிழக விரோத போக்கிற்கு எதிராக மக்கள் ஓரணியில் திரண்டு இந்தியா கூட்டணிக்கு ஆதரவாக அணிவகுத்து நிற்கிறார்கள். எக்கு கோட்டை போல இருக்கிற இந்தியா கூட்டணிக்கு எதிரான வாக்குகளை அ.தி.மு.க., பா.ஜ.க கூட்டணி, தமிழக வெற்றி கழகம், நாம் தமிழர் கட்சி பங்கு போட்டுக் கொள்கிற சூழல் தான் 2026 சட்டமன்றத் தேர்தலில் இருக்கப் போகிறது. இதன் அடிப்படையில் இந்தியா கூட்டணி தமிழகத்தில் மீண்டும் வெற்றி பெற்று நல்லாட்சி அமைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

# சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து இன்று விரதம் தொடங்குகிறார்கள்


திருவனந்தபுரம்,நவ.17: சபரிமலையில் புகழ்பெற்ற ஐயப்பன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் மண்டல பூஜை மற்றும் மகர விளக்கு தரிசனத்திற்காக கார்த்திகை மாதம் 1-ந்தேதி முதல் துளசி மாலை அணிந்து விரதம் இருந்து இருமுடி கட்டு சுமந்து செல்வது வழக்கம். மண்டல பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவிலில் நேற்று நடை திறக்கப்பட்டது.

இந்த ஆண்டு கார்த்திகை மாதம் இன்று (திங்கட்கிழமை) பிறக்கிறது. இதையொட்டி கார்த்திகை முதல் தேதியான நாளை சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்கள் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு கோவிலுக்கு சென்று துளசி மாலை அணிந்து விரதம் தொடங்குகிறார்கள்.

கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலித் துறை கடற்கரையில் நாளை அதிகாலையில் இருந்து ஏராளமான ஐயப்ப பக்தர்கள் கடலில் புனித நீராடி கோவில்களுக்கு சென்று துளசி மாலை அணிந்து விரதம் தொடங்குகிறார்கள்.

இதனால் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் உள்பட அனைத்து கோவில்களிலும் நாளை காலையில் மாலை அணிவதற்காக ஐயப்ப பக்தர்கள் கூட்டம் அலைமோதும். இன்று முதல் எங்கு பார்த்தாலும் சரண கோஷம் ஒலிக்கும். ஐயயப்ப பக்தர்கள் நீலம் மற்றும் கருப்பு நிற ஆடை அணிந்து 41 நாட்கள் விரதம் இருந்து வருவார்கள்.

இதில் சிலர் மண்டல பூஜை தரிசனத்துக்காகவும் மற்றும் சிலர் மகர விளக்கு தரிசனத்திற்காகவும் இருமுடி கட்டி சபரிமலைக்கு செல்வார்கள். குமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கோவில்களிலும் கார்த்திகை மாதம் 30 நாட்களும் சிறப்பு வழிபாடு நடக்கிறது. இது தவிர இன்று முதல் வீடுகள் தோறும் கார்த்திகை தீபம் ஏற்றி பெண்கள் வழிபடுவார்கள்.

# திருச்செந்தூர் கோவிலில் அலைமோதிய பக்தர்கள்

## 5 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம்



திருச்செந்தூர், நவ.17: அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலானது சிறந்த பரிகார தலமாகவும், ஆன்மீக தலமாகவும் விளங்கி வருகிறது.

இதனால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இங்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை நாட்களில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விடுமுறை தினம் என்பதால் காலை முதலே ஏராளமான பக்தர்கள் கோவிலில் குவிந்தனர். இதையொட்டி கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடந்தது. கோவிலுக்கு வந்த பக்தர்கள் அதிகாலையில் இருந்தே கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி சுமார் 5 மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

நேற்று ஐப்பசி மாதம் கடைசி சுப முகூர்த்த தினம் என்பதால் திருச்செந்தூர் கோவிலில் ஏராளமான திருமணங்கள் நடைபெற்றது. இதனால் கோவிலில் பக்தர்கள் கூட்டத்துடன் மணமக்கள் வீட்டார்கள் கூட்டமும் கோவில் அதிகமாக காணப்பட்டது.

# தங்கம் விலையை பார்த்தாலே பயமாக இருக்கிறது - ஆண்ட்ரியா



கோவை, நவ.17: தங்கம் விலை கடந்த மாதம் (அக்டோபர்) 17-ந்தேதி ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 200-க்கும், ஒரு சவரன் ரூ.97 ஆயிரத்து 600-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுதான் இதுவரை இல்லாத தங்கம் விலை உச்சமாக பார்க்கப்பட்டது.

அதன் பின்னர் விலை அதிகரிக்கும் என சொல்லப்பட்ட நிலையில், விலை குறையத் தொடங்கியது. அதனையடுத்து தங்கம் விலையில் ஏற்ற-இறக்கம் நிலையும் நீடித்து வந்ததை பார்க்க முடிந்தது.

இந்நிலையில், கோவையில் நகைக்கடை ஒன்றை நடிகை ஆண்ட்ரியா திறந்து வைத்தார்.

அதன்பின்பு பேசிய ஆண்ட்ரியா, "கோவை எனக்கு மிகவும் பிடித்த ஊர். நான் அடிக்கடி இங்கு வருவேன். தங்கம் பார்க்க மிகவும் அழகாக தான் இருக்கிறது.

ஆனால் தங்கம் விலையை பார்த்தாலே தற்போது பயமாக இருக்கிறது" என்று தெரிவித்தார்

# நீலகிரியில் அறிமுகமாகும் கருப்பு கேரட் சிம்ஸ் பூங்காவில் சோதனை முறையில் சாகுபடி




நீலகிரி, நவ.17: கேரட்... இளஞ்சிவப்பு(ஆரஞ்சு) நிறத்தில் இருக்கும். இது அனைவரும் அறிந்ததே...! ஆனால், கருப்பு நிறத்திலும் கேரட் இருக்கிறது. அதுபற்றி தெரியுமா...?

ஆம்...அந்த கருப்பு கேரட் சாகுபடியில் களமிறங்கி இருக்கிறது, நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத்துறை.

### டெல்லியில் இருந்து விதைகள்

இங்கு ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கேரட் சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது தேயிலை சாகுபடிக்கு அடுத்ததாக பிரதான சாகுபடியாக கேரட் உள்ளது.

இந்த நிலையில் நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் உள்ள நர்சரியில் தோட்டக்கலைத்துறை சார்பில் முதன் முறையாக கருப்பு கேரட் உற்பத்திக்கான சோதனை முயற்சி நடைபெற்று வருகிறது.

இதற்கான விதைகள் டெல்லியில் இருந்து வரவழைக்கப்பட்டன. நர்சரியில் அந்த விதைகள் விதைக்கப்பட்டன.

அத்துடன் தோட்டக்கலைத் துறை மூலம் தயாரிக்கப்பட்ட மண்ணுயிர் உரம் இடப்பட்டது. இந்த பணியில் பூங்கா மேலாளர் லட்சுமணன் தலைமையில் தோட்டக்கலை பணியாளர்கள் ஈடுபட்டனர்.

கருப்பு கேரட் 3 முதல் 3½ மாதங்களில் அறுவடைக்கு வந்துவிடும். இவை வடமாநிலங்களில் பல்வேறு உணவு வகைகள், கேக் தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நீலகிரியில் பெரும்பாலான இடங்களில் இளஞ்சிவப்பு(ஆரஞ்சு) நிற கேரட் விளைவிக்கப்பட்டு வருகிறது. தற்போது புதிய முயற்சியாக கருப்பு நிற கேரட் உற்பத்திக்கான சோதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக தோட்டக் கலைத்துறையினர் கூறுகையில், கருப்பு கேரட் விதைத்து, அதன் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்யப்பட உள்ளது. வளர்ந்த பிறகு, அதில் இருந்து விதைகள் சேகரிக்கப்பட உள்ளது. இந்த வகை கேரட் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். பொட்டாசியம், வைட்டமின் கே உள்ளது. சோப்பு தயாரிப்பில் இயற்கை வர்ணத்துக்காகவும் பயன்படுத்தப்படுகிறது என்றனர்.

# சுந்தர் சி விலகல் குறித்து கமல் விளக்கம்... ரஜினியுடன் இணைந்து நடிப்பது குறித்து சுவாரஸ்ய தகவல்




சென்னை, நவ.17: எனது தயாரிப்பில் ரஜினி நடிக்கும் படத்திற்கான வேலைகள் முதலில் முடிக்கப்படும்.

அந்த கதைக்கான விவாதம் போய் கொண்டு இருக்கிறது.

கமல்ஹாசன் தயாரிப்பில் ரஜினியின் 173-வது படத்தை சுந்தர் சி இயக்குவதாக இருந்த நிலையில் திடீரென இயக்குநர் சுந்தர் அப்படத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தவிர்க்க முடியாத காரணங்களால் ரஜினி படத்தில் இருந்து விலகுகிறேன். புதிய படம் குறித்து ஆவலுடன் எதிர்பார்த்த ரசிகர்கள் எனது மனமார்ந்த மன்னிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். ஆர்வத்துடன் காத்திருந்தவர்களை அதிருப்திக்குள்ளாக்கியதில் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று தெரிவித்து இருந்தார்.

ரஜினி படத்தில் இருந்து சுந்தர் சி விலகியது தொடர்பாக பல்வேறு யூகங்கள் உலா வந்தன. இந்நிலையில் நடிகர் கமல்ஹாசன் சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.


அப்போது அவரிடம் உங்கள் தயாரிப்பில் ரஜினி நடிப்பில் சுந்தர்.சி இயக்குவதாக இருந்த படத்தில் இருந்து திடீரென அவர் விலகி உள்ளார். மீண்டும் இணைவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? என்று கேட்டனர்.

அதற்கு பதில் அளித்த கமல்ஹாசன், 'அவரின் நிலைப்பாட்டை அவர் சொல்லி இருக்கிறார். அது பத்திரிகைகளில் பார்த்தோம். நான் முதலீட்டாளன். எனது நட்சத்திரத்திற்கு பிடித்தார் போல் கதை இருக்க வேண்டும். அவருக்கு கதை பிடிக்கும் வரை புதிய இயக்குனரை தேடிக் கொண்டு இருப்பேன்' என்றார்.

மீண்டும் உங்களுடன் இணைவதற்கு முயற்சி எடுக்கப்படுமா? என்ற மற்றொரு கேள்விக்கு, பதில் அளித்த அவர், 'ரஜினிகாந்த் அவர்களுக்கு ஏற்றார் போல், பிடித்தார் போல் கதை அமைய வேண்டும்' என்று கூறினார்.

'நீங்களும், ரஜினியும் இணையும் படம் எப்போது?' என்று கேட்ட போது, 'அது வேறொரு கதை. அந்த கதைக்கான விவாதம் போய் கொண்டு இருக்கிறது. அதற்கு முன்பாக எனது தயாரிப்பில் ரஜினி நடிக்கும் படத்திற்கான வேலைகள் முதலில் முடிக்கப்படும். அந்த கதை எப்படி இருக்கும்?' என்ற கேள்விக்கு 'எதிர்பாராததை எதிர்பாருங்கள்' என்றார்.

# வன்னியர் உள் இட ஒதுக்கீடு கோரி தமிழகம் முழுவதும் டிசம்பர் 17-ந்தேதி போராட்டம்- அன்புமணி,



சென்னை, நவ.17: பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-


என் உயிரினும் மேலான பாட்டாளி சொந்தங்களே, நமக்கே உரித்தான கற்களும், முட்களும் நிறைந்த சமூகநீதியை நோக்கிய இன்னொரு போராட்டப் பாதையில் பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம். தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு குறைந்தது 15 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அடுத்த மாதம் (டிசம்பர்) 17-ந்தேதி தமிழகம் முழுவதும் நாம் நடத்தவிருக்கும் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு சிறை நிரப்பும் போராட்டத்தைப் பற்றி தான் நான் குறிப்பிடுகிறேன்.

தி.மு.க. அரசின் சமூக அநீதிகளைக் கண்டு தி.மு.க.வில் உள்ள வன்னியர்களும் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் அதை வெளிப்படுத்த ஒரு வழி தேவைப்படுகிறது. அதே போல், அதி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுமே வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். இயல்பாகவே நாம் தான் வன்னியர்களுக்கான சமூகநீதி போராட்டத்தைமுன்னெடுத்து வருகிறோம். எனவே, நமது பாட்டாளி சொந்தங்கள் அடுத்த மாதம் (டிசம்பர்) 17-ந்தேதி நாம் நடத்தவிருக்கும் 'வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி சிறை நிரப்பும் போராட்டத்தின்' நோக்கங்களை விளக்கும் துண்டறிக்கைகளை அனைத்துக் கட்சியினரிடமும் கொடுத்து, குடும்பத்துடன் வன்னியர் இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் பங்கேற்க வருமாறு அன்புடன் அழைப்பு விடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் அனைத்து சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு, சிறை நிரப்புவதற்காக நாம் நடத்தவிருக்கும் போராட்டம் பத்தோடு பதினொன்றாக இருக்கக்கூடாது. நமது வலிகளையும், வலிமையையும் வெளிப்படுத்தும் வகையில் வெற்றிகரமாக அமைய வேண்டும். பாட்டாளிகளை அடைக்க தமிழ்நாட்டின் சிறைகள் போதாது என்று அஞ்சும் அளவுக்கும், வன்னியர்களுக்கான சமூகநீதியை இனியும் தாமதிக்கக்கூடாது என்று நினைத்து உடனடியாக வன்னியர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றும் அளவுக்கும் டிசம்பர் 17-ந்தேதி சிறை நிரப்பும் போராட்டம் அமைய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# ஐ.நா.வின் குழந்தைகள் நல அமைப்பான UNICEF தூதராக நடிகை கீர்த்தி சுரேஷ் நியமனம்!



சென்னை, நவ.17: தமிழ், தெலுங்கு, மலையாள படங்களில் முன்னணி நடிகையாக திகழ்பவர் கீர்த்தி சுரேஷ்.


இவர் ஐக்கிய நாடுகள் சபையில் குழந்தைகள் நல நிதியமான UNICEF உடைய இந்தியாவுக்கான தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்த கீர்த்தி சுரேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "குழந்தைகள் தான் நமது மிகப்பெரிய எதிர்க்கால நம்பிக்கை, அவர்கள் மீது அன்பு செலுத்தி சிறந்தவர்களாக உருவாக்குவதற்கு தேவையான அடித்தளத்தை மேம்படுத்த வேண்டியது நமது கடமை.

UNICEF இந்தியா அமைப்புடன் இணைந்து செயல்படுவதில் பெருமை அடைகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

உலகின் 190 நாடுகளில் செயல்பட்டு வரும் UNICEF, சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, பாதுகாப்பு உரிமைகள் குழந்தைகளுக்கு கிடைப்பதை உறுதி செய்ய பணியாற்றி வருகிறது. இதற்கு முன்னரும் UNICEF இந்தியாவின் தூதர்களாக பல திரைப் பிரபலங்கள் இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி



திருவண்ணாமலை நவம்பர் -16 ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் இன்றைய தினமான சிறப்பு அலங்காரத்தில் பூஜையில் கணேஷ் ஐயர் அவர்களால் அபிஷேக, அலங்காரத்துடன், வண்ணமலர் மாலைகளால் சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன் அருள்பாலிக்கும் காட்சி.

# தூத்துக்குடி-மைசூரு, நாகர்கோவில்-கோவை ரெயில்களுக்கு கூடுதல் நிறுத்தம்



**மதுரை, நவ.17:** ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஊஞ்சலூர் திருவிழாவை முன்னிட்டு தென்னக ரெயில்வே சார்பில் பக்தர்களின் வசதிக்காக எக்ஸ்பிரஸ் ரெயில்களுக்கு தற்காலிக நிறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, தூத்துக்குடி-மைசூரு எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.16235) வருகிற ஜனவரி மாதம் 6-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை ஊஞ்சலூரில் ஒரு நிமிடம் மட்டும் நின்று செல்லும்.

மறுமார்க்கத்தில் இந்த ரெயில் (வ.எண்.16236) வருகிற ஜனவரி மாதம் 5-ந் தேதி முதல் 11-ந் தேதி வரை ஒரு நிமிடம் மட்டும் நின்று செல்லும். நாகர்கோவில்-கோவை எக்ஸ்பிரஸ் கட்டண பாசஞ்சர் ரெயில் (வ.எண்.16321/16322) இரு மார்க்கங்களிலும் வருகிற ஜனவரி மாதம் 6-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை ஊஞ்சலூர் ரெயில் நிலையத்தில் ஒரு நிமிடம் மட்டும் தற்காலிகமாக நின்று செல்லும்.

# சமூக நல விடுதியில் மாணவரை தாக்கிய சக மாணவர்களை விடுதியில் இருந்து நீக்கி ஆட்சியர் உத்தரவு




**ராமநாதபுரம், நவ.17:** ராமநாதபுரம் அரசு சமூக நல விடுதியில் பட்டியலின மாணவர் மீது பிற சமூக மாணவர்கள் தாக்குதல் நடத்திய வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அம்மா பூங்கா பகுதியில் உள்ள அரசு சமூக நல விடுதியில் 8-ம் வகுப்பு மாணவர் மீது பிற சமூக மாணவர்கள் சரமாரி தாக்குதல் நடத்தி உள்ளனர். வீடியோவில், மாணவரை கீழே தள்ளி அடித்ததோடு சித்ரவதை செய்தது வெளியாகி இருந்தது.

இந்நிலையில் விடுதியில் மாணவரை சக மாணவர்கள் தாக்கும் வீடியோ வெளியான நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை குழு அமைத்த ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் சக மாணவர்களை விடுதியில் இருந்து நீக்கி உத்தரவிட்டுள்ளார்.

விடுதியில் மாணவரை சக மாணவர்கள் தாக்கிய நேரத்தில் அரசு சமூக நல விடுதி காப்பாளர், சமையலர் எங்கே என கேள்வி எழுந்துள்ளது.




# மானாமதுரை நகராட்சி வார்டுகளில் சாலைபணிகள் முழுமையாக முடிக்க படும்

## நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி தகவல்





**மானாமதுரை, நவ.17:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி கூட்டம் தலைவர் மாரியப்பன் கென்னடி தலை மையில் நடைபெற்றது. துணைத் தலைவர் பாலசுந்தரம் முன்னிலை வகித்தார். ஆனையாளர் கோபாலகிருஷ்ணன், பொறியாளர் பட்டு ராஜன் வரவேற்றனர். கூட்ட அலுவலர் சரவணன் மன்ற தீர்மானங்களை வாசித்தார். கூட்டத்தில் தி.மு.க., கவுன்சிலர் சோம சதீஷ்குமார் பேசியதாவது மானாமதுரை கடைவீதிகளில் ஆக்கிரமிப்பு அதிகரித்து வருகிறது இதை நகராட்சி ஆணையர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகராட் சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பணிகள் மோச மான நிலையில் நடைபெறுவதால் கழிவுநீர் தேங்கி, குப்பை குவிந்து கிடப்பதாகவும்,கவுன்சிலர்கள் கூறுவதை சுகாதார ஆய்வாளர் கேட்பதில்லை சுகாதார பணி முழுமையாக நடைபெறவேண்டும். காளீஸ்வரி திமுக கவுன்சிலர்கள் குறை சொல்லக்கூடாது என்பதற்காக கூட்டம் நடைபெறும் நாட்களின் போது மட்டுமே கொசு மருந்து அடிக்கப்படுகிறது. மாதந்தோறும் கொசு மருந்து அடிக்க வேண்டும். ஆனையாளர் கோபாலகிருஷ்ணன்: நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேங்கும் குப்பையை அகற்ற சேதம டைந்த டிராக்டர்களுக்கு பதிலாக புதிதாக டிராக்டர் கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துப்புரவு ஆய்வாளர் மற் றும் மேஸ்திரிகள் தினம் தோறும் அனைத்து பகுதிகளுக்கும் சென்று துப்புரவு பணிகளை ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாரிக்கண்ணன், தி.மு.க.. நகராட்சிக்குட் பட்ட பகுதிகளில் தற் போது போடப்பட்ட தார் ரோடுகளில் பெரும்பா லான ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

வீட்டு வரி ரசீது போடுவதில் முறைகேடு நடைபெற்றுள்ளது. இந்திரா அ.தி.மு.க., பழைய தபால் ஆபீஸ் தெருவில் நள்ளிரவில் குடிநீர் வினியோகம் செய்வதால் மக்கள் அவ திப்பட்டு வருகின்றனர் காலையில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும். தெய்வேந்திரன் அ.தி. மு.க.. மானா மதுரை வைகை ஆற்றில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு செயல்பட்ட முன்னோர்களுக்கு திதி கொடுக் கும் இடத்தை மீண்டும் சீரமைத்து படித்துறை அமைக்க வேண்டும்.

துணைத் தலைவர் பாலசுந்தரம் சாலைபணி தரத்தை ஆய்வு செய்யவேண்டும் எனது வார்டில் உள்ள தெருவில் மழைநீர் வடிகால் அமைக்க முடிவு செய்து ஆனால் எனக்கு தெரியாமல் சாலை அமைக்க பட்டது அதில் தரமில்லாத சாலையாக உள்ளதாக வார்டு மக்கள் என்னிடம் கூறியதையடுத்து நகராட்சி அலுவலகத்தில் தர்ணா போராட்டம் நடத்தும் நிலை ஏற்பட்டது. தலைவர் மாரியப்பன் கென்னடி விரைவில் அனைத்து வார்டுகளில் சாலை பணிகள் தரமாக நடைபெறும். சாலை பணிகள் முழுவதும் கண்காணிக்கப்படும்.

சாலைகள் அமைக்கும் ஒப்பந்ததாரர்கள் தரமாக சாலை அமைக்க அறிவுறுத்தப்படும். நகராட்சியில் சுகாதார துறை செயல்படாத துறையாக இருப்பதாக புகார்கள் வருகிறது. ஆய்வாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் செய்யும் பணிகள் திருப்தி இல்லை. இதற்கு முன்பு இங்கு பணிபுரிந்த சுகாதார ஆய்வாளர் மரக்கன்றுகளை நட்டும் தூய்மையை வலியுறுத்தி பொதுமக்களின் பாராட்டை பெற்றார். தற்போது உள்ள சுகாதார ஆய்வாளர் சுகாதாரம் பணிகளை உடனுக்குடன் செய்ய வேண்டும்.

ஆனையாளர் தீவிர முயற்சி செய்து நகராட்சி நிர்வாக பயன்பாட்டிற்கு ஜேசிபி வாகன எந்திரம் வாங்க அனுமதி பெற வேண்டும். அதிகாரிகள் நகராட்சி பணியாளர்கள் வார்டுகளில் பார்வையிட செல்லும் போது கவுன்சிலர்களையும் தகவல் தெரிவித்து அழைத்து செல்ல வேண்டும். கூட்டத்தில் சுகாதார பணிகள் விரைவாக நடைபெற வேண்டும் என அனைத்து கவுன்சிலர்கள் கோரிக்கை விடுத்தனர். மேலாளர் பாலகிருஷ்ணன் துப்புரவு ஆய்வாளர் பாலமுருகன், கவுன்சிலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# அரங்கநாதசுவாமி திருக்கோயில் தீர்த்த வாரி







ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் நம்பெருமாள் ஊஞ்சல் திருநாள் 2025 டோலோத்ஸவம் ஒன்பதாம் திருநாள் சின்ன பெருமாள் தீர்த்தபேரர் தீர்த்த வாரி

# கன்னியாகுமரியில் அய்யப்ப பக்தர்கள் சீசன் இன்று தொடக்கம்..

## பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்த போலீஸ் சூப்பிரண்டு

**கன்னியாகுமரி, நவ.17:** சபரிமலை அய்யப்பன் கோவிலில் மண்டல, மகரவிளக்கு சீசன் நாளை (திங்கட்கிழமை) தொடங்கி ஜனவரி மாதம் 20-ந் தேதி வரை 65 நாட்கள் நடக்கிறது. இந்த நாட்களில் தினமும் ஆயிரக்கணக்கான அய்யப்ப பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருவார்கள். இதனால் கன்னியாகுமரியில் அய்யப்ப பக்தர்கள் சீசன் நாளை தொடங்குகிறது. இதனை முன்னிட்டு நகராட்சி, போலீசார், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் உள்ளிட்ட துறைகள் சிறப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

இந்தநிலையில் நேற்று மாலையில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் கன்னியாகுமரிக்கு வந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்தார். அப்போது அவர் திரிவேணி சங்கமம், கடற்கரை சாலை, காட்சி கோபுரம், ஜீரோ பாயிண்ட், கார் பார்க்கிங், ரவுண்டானா உள்ளிட்ட முக்கிய பகுதிகளை பார்வையிட்டார்.


பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:-

கன்னியாகுமரியில் சபரிமலை சீசனை முன்னிட்டு மொத்தம் 450 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். தினமும் 150 பேர் வீதம் மூன்று சுழற்சி முறையில் பணியாற்றுவார்கள். பல்வேறு மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்களின் வசதிக்காக இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் மொழி தெரிந்த போலீசார்களும் நியமிக்கப்படுகிறார்கள். திரிவேணி, கடற்கரை சாலை, சீரோ பாயிண்ட் உள்ளிட்ட 4 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன. நகரம் முழுவதும் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் பராமரிக்கப்பட்டுள்ளன. மேலும் 10 புதிய கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின்போது துணை போலீஸ் சூப்பிரண்டு ஜெயச்சந்திரன், இன்ஸ்பெக்டர் சரவணன், போக்குவரத்து இன்ஸ்பெக்டர் அருள் சேகர் மற்றும் போலீஸ் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# தினம் ஒரு குறள்



**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி.** - குறள் 137

మంచి నడతవలన మర్యాద హెచ్చును
తప్పు నడత వలన ముప్పు వచ్చు - కురల్ 137

**सदाचार से ही रही, महा कीर्ति की प्राप्ति ।**
**उसकी च्युति से तो रही, आति निन्दा की प्राप्ति ॥** - कुराल 137

Ozhukkaththin Eydhuvar Menmai Izhukkaththin
Eydhuvar Eydhaap Pazhi - Kural 137

# 6 முதல் 12ஆம் வகுப்புகளுக்கான அரையாண்டு தேர்வு அட்டவணை வெளியீடு

**சென்னை, நவ.17:** 6 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான அரையாண்டு தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 6 முதல் 9ஆம் வகுப்புகளுக்கு டிசம்பர் 15-ந்தேதி முதல் டிசம்பர் 23ஆம் தேதி வரை அரையாண்டு தேர்வு நடைபெறும்.

10 முதல் 12ஆம் வகுப்புகளுக்கு டிசம்பர் 10-ந்தேதி முதல் 23ஆம் தேதி வரை அரையாண்டு தேர்வு நடைபெறும்.


6 முதல் 9ஆம் வகுப்புகளுக்கான அட்டவணை
டிசம்பர் 15- தமிழ்மொழி தேர்வு
டிசம்பர் 16- ஆங்கிலம்
டிசம்பர் 17- விருப்ப மொழி தேர்வு
டிசம்பர் 18 கணிதம்
டிசம்பர் 19- உடற்கல்வி தேர்வு
டிசம்பர் 22- அறிவியல்
டிசம்பர் 23- சமூக அறிவியல்

10-ஆம் வகுப்பு
டிசம்பர் 10- தமிழ்மொழி
டிசம்பர் 12- ஆங்கிலம்
டிசம்பர் 15- கணிதம்
டிசம்பர் 18- அறிவியல்
டிசம்பர் 22- சமூக அறிவியல்
டிசம்பர் 23 விருப்ப மொழி தேர்வு

11ஆம் வகுப்பு
டிசம்பர் 10- தமிழ்
டிசம்பர் 12 ஆங்கிலம்
டிசம்பர் 15- இயற்பியல், பொருளாதாரம்
டிசம்பர் 17- கணிதம், விலங்கியல், வர்த்தகம்
டிசம்பர் 19- வேதியியல், கணக்கு பதிவியல்
டிசம்பர் 22- கணினி அறிவியல்
டிசம்பர் 23- உயிரியல், வரலாறு, தாவரவியல்

12ஆம் வகுப்பு
டிசம்பர் 10- தமிழ்மொழி தேர்வு
டிசம்பர் 12- ஆங்கிலம்
டிசம்பர் 15- கணிதம், விலங்கியல், வணிகவியல், நுண்ணுயிரியல், விவசாய அறிவியல்
டிசம்பர் 17- வேதியியல், கணக்குப்பதிவியல், புவியியல்
டிசம்பர் 19- இயற்பியல், பொருளாதாரம்
டிசம்பர் 22- உயிரியல், தாவரவியல், வரலாறு
டிசம்பர் 23- கணினி அறிவியல்

# மயிலாடுதுறை காவிரி துலா உற்சவம்.. பரிமள ரெங்கநாதர் கோவிலில் தேரோட்டம்



**மயிலாடுதுறை, நவ.17:** காவிரி நதியில் ஐப்பசி மாதம், கங்கை முதலான புண்ணிய நதிகள் கலந்து ஓடுவதாக ஐதீகம். இதனை முன்னிட்டு, மயிலாடுதுறையில் காவிரியை மையப்படுத்தி கோவில்களில் துலா உற்சவம் நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டின் துலா உற்சவம் கடந்த 7-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

108 வைணவ திவ்ய தேசங்களுள் 22-வது தலமாகவும், பஞ்ச அரங்கங்களில 5-வது அரங்கமாகவும் திகழும் மயிலாடுதுறை திருவிழந்தூர் பரிமளரங்கநாதர் கோவிலிலும் ஐப்பசி மாத காவிரி துலா உற்சவம் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

உற்சவத்தின் 10-ம் நாளான இன்று தேரோட்டம் நடந்தது. இதனை முன்னிட்டு ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் பரிமளரெங்கநாதர் தேரில் எழுந்தருள செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. ஏராளமான பக்தர்கள் கலந்துகொணடு 'கோவிந்தா, பரிமள ரெங்கநாதா, நாராயணா' என பக்தி முழக்கம் எழுப்பியபடி வடம் பிடித்து தேர் இழுத்தனர். தேரோட்டத்தின்போது மழை பெய்தது. சிலர் மழையில் நனைந்தபடியும், சிலர் குடை பிடித்துக் கொண்டும் தேர் இழுத்தனர்.

நான்கு வீதிகளையும் சுற்றி வந்த தேர் மீண்டும் நிலையை அடைந்தது. இதனைத்தொடர்ந்து மதியம் பரிமளரங்கநாத பெருமாள் காவிரி மண்டபத்தில் எழுந்தருளி தீர்த்தவாரி நடந்தது.

## கவிதை அரங்கம்!





வாழ்வில் வலிகளும்
காயங்களுமே மனிதனை
மாற்றுகிறது சிலரை
அமைதியாகவும்
சிலரை அரக்கனாகவும்

உடல்சோர்வு ஒரு
பலவீனமே அல்ல
மனச்சோர்வு தான்
உண்மையில்
பலவீனமாகும்


எதையும் புரிந்து
கொண்டால்தான்
தெளிவாகும்
புரியாத வரை
அனைத்துமே புதிர் தான்

அறிஞர்கள் அறிவை
தேடுகிறார்கள்
அறிவிலிகளோ
அதை பெற்றுவிட்டதாக
நினைத்து கொண்டு
இருக்கிறார்கள்

மனிதனின் விரல்கள்
அனைத்தும் சமம்
இல்லை ஒப்பீட்டு
பேசும் அளவுக்கு
எல்லா மனிதனும்
நல்லவனும் இல்லை

கஷ்டங்கள் வரும்போது
எதிர்நீச்சல் போட கற்றுக்
கொள்ளவில்லை எனில்
நீச்சல் தெரிந்தும்
பயனில்லை

## வாழ்க்கையின் விதைகள்...




உங்கள் எண்ணங்கள் தான் உங்கள் வாழ்க்கையின் விதைகள்...

முள்ளை விதைத்தால், ரோஜா மலராது...

அதேபோல், எதிர்மறை எண்ணங்களை விதைத்துக்கொண்டே இருந்தால் வளர்ச்சி வராது.

உங்கள் வாழ்க்கை வெளியில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கும் முன்,

உங்கள் உள்ளத்தில் என்ன விதைக்கிறீர்கள் என்பதைப் பாருங்கள்.

நம்பிக்கையை விதையுங்கள்...

நன்றியுணர்வை வளர்த்திடுங்கள்...

பின்பு..

உங்கள் வாழ்க்கை ஒரு அழகான பூந்தோட்டமாக மலரும்.

“உங்கள் உள்ளத் தோட்டத்தில் இன்று என்ன விதைக்கிறீர்கள்?”

வாழ்க வளமுடன்

என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

## "இன்னொரு ஜான்சிராணி"




இரவு ஏழு மணி.

திண்ணையில் அமர்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தாள் சிறுமி கங்கா. அப்போது அவளது தந்தையைத் தேடி வந்த சிலர் அவரிடம் எதையோ ரகசியமாய் கேட்க, அவரும் தலையசைத்தபடி அவர்களை வீட்டின் பின்புறம் அழைத்துச் செல்ல, கங்காவுக்கு எதுவுமே புரியவில்லை.

சில நிமிடங்களில் அந்த நபர்கள் கையில் எதையோ மறைத்து மறைத்து எடுத்துச் செல்ல, அவர் தந்தை கை நிறைய பணத்துடன் வீட்டினுள் சென்றார்.

"என்ன நடக்குது இங்கே?... அவங்க எதுக்கு வந்தாங்க?... இவர் என்ன கொடுத்தார் அவங்களுக்கு?... அவங்க ஏன் அதை மறைத்து மறைத்து எடுத்திட்டுப் போறாங்க?" குழப்பத்தில் ஆழ்ந்தவளால் மேற்கொண்டு படிக்க இயலவில்லை.

அடுத்த வாரத்தில் ஒரு நாள்,

ஊருக்குள் ஏழெட்டு பேர் கள்ளச்சாராயம் அருந்தி இறந்து விட, போலீஸ் வீடு வீடாய்ச் சென்று சோதனை போட்டது.

எங்கும் எதுவும் கிடைக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் ஊருக்கு நடுவில் நின்று பேசினார். "இதப் பாருங்க.. இந்த ஊர்ல கள்ளச்சாராய நடமாட்டம் அமைதியாக நடந்திட்டிருக்கு... யார் விற்கிறார்கள்?... எங்கே வைத்து விற்கிறார்கள்?... எதுவுமே தெரியலை!... யாருக்காவது இதைப் பற்றி ஏதாவது தகவல் தெரிஞ்சா... தைரியமா வந்து போலீஸ் ஸ்டேஷன்ல சொல்லுங்க!.. நிச்சயம் உங்களுக்கு ரிவார்ட் கிடைக்கும்"

அவர் சொல்லிச் சென்று ஒரு வாரமாகியும் எந்தவிதத் தகவலோ... தடயமோ... அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

அன்று பள்ளி ஆண்டு விழா.

அந்த விழாவில் சிறுமி கங்கா ஜான்சி ராணி வேடத்தில் நடிக்கப் போகிறாள்.

அதற்காக அதிகாலையில் சற்று சீக்கிரமாகவே எழுந்து குளிப்பதற்காக பாத்ரூம் சென்றவள் அங்கே ஏற்கனவே அவளுடைய தாய் குளித்துக் கொண்டிருப்பதை கண்டு கோபமானாள். "அய்யய்யோ... அம்மா... இன்னைக்கு நான் சீக்கிரம் போகணுமே!" கத்தினாள்.

"ஏய்...ஏண்டி கத்தறே?... பக்கத்தில் உங்க அப்பா பாத்ரூம் இருக்குதுல்ல அதுல போய்க் குளி" என்றாள் தாய் பாத்ரூமுக்குள் இருந்தபடி.

அதற்காகவே காத்திருந்தவள் போல் கங்கா அப்பாவின் பாத்ரூமிற்குள் நுழைந்தாள். அந்த பாத்ரூமில் உள்ள சிறிய தொட்டியில் நீர் நிறைந்திருக்க ஆவலோடு அதனுள் பக்கெட்டை விட்டவள் அதனுள்ளிருந்து "க்ளிங்...க்ளிங்" என்று சத்தம் கேட்க, உள்ளே எட்டிப் பார்த்தாள்.

தண்ணீருக்கு அடியில், பாலித்தீன் கவருக்குள் அடைக்கப்பட்டிருந்த சாராய பாட்டில்களைக் கண்டு நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தாள்.

"அப்படின்னா... ஊருக்குள் கள்ளச்சாராயம் விற்பது என்னுடைய அப்பாவா?"/நொந்து போனாள்.

ஆண்டு விழா நிகழ்ச்சி சரியான நேரத்தில் துவங்கி விட, ஜான்சி ராணி வேடத்தில் முதுகில் குழந்தைக்கு பதிலாய் ஒரு பொம்மைக் குழந்தையைச் சுமந்து கொண்டு, பெரிய மரக்கட்டைக் குதிரை மீது அமர்ந்து வாள் சுழற்றினாள் கங்கா.

அந்த வினாடியில் அவளுக்குள் ஜான்சி ராணியே புகுந்துவிட வீராவேசமானாள்.

ஆசிரியர் சொல்லிக் கொடுத்த வசனங்களை அனல் பறக்கப் பேசினாள்.

நாடகம் முடிந்து மேடையை விட்டுக் கீழே இறங்கியவள் அதே ஜான்சி ராணி வேடத்தில் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் கங்காவின் தந்தையைக் காவல்துறை கைது செய்ய, அவள் தாய் மகளைத் திட்டித் தீர்த்தாள்.

"அம்மா... நான் அப்பாவை சிறைக்கு அனுப்பியதை மட்டும்தான் உனக்குத் தெரியுது... எதிர்காலத்திலே உயிரை இழக்க காத்திருக்கிற பல அப்பாக்களை அந்தக் கள்ளச் சாராயத்திலிருந்து நான் காப்பாற்றி இருக்கிறேன்... அதையும் புரிஞ்சுக்கோ!" என்றாள் ஜான்சிராணியாய் வாளைச் சுழற்றிபடியே.

**முகில் தினகரன்**
கோயம்புத்தூர்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"*

*காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"*

*காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"*

*காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"*

## தினம் ஒரு சமையல்



### ராகி சேமியா உப்புமா

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| இட்லி அரிசி | -1 கப் |
| உளுத்தம் மாவு | -1 டேபிள் ஸ்பூன் |
| சூடு எண்ணெய் | -2 கரண்டி |
| காரம் உப்பு | -தேவைக்கு |
| பெருங்காயம், வெள்ள எள்ளு | |
| எண்ணெய் | -பொரிப்பதற்கு |

செய்முறை:



முதலில் இட்லி அரிசியை 2 மணி நேரம் தண்ணீரில் ஊற விட்டு கிரைண்டரில் உப்பு சேர்த்து நன்கு மய்யாக அரைத்து எடுத்துக்கவும்

அத்துடன் உளுத்தம் மாவு, காரத்துதுக்கேர்ப்ப மிளகாய் தூள், பெருங்காயம் சேர்த்து நன்கு பிசைந்த பிறகு சூடான எண்ணெய் விட்டு நன்றாக பிசைந்துக்கவும்

ஸ்டவ்வில் வானலி வைத்து எண்ணெய் ஊற்றி காய விடவும். இடியப்ப நாழியில் ஒற்றை ஸ்டார் அச்சு வைத்து மாவை நிரப்பி ஒரு கரண்டி அல்லது பிளாஸ்டிக் ஷீட்டின் மேல் அழகாக் வட்டமாக சுத்தி பிழிந்து விடவும்

அதை அப்படியே காய்ந்த எண்ணையில் எடுத்து போடவும்., முறுக்கு எல்லாவற்றையும் இதேபோல் ஒவொன்னாக எண்ணையில் போட்டு, இரண்டு பாக்கவும் திருப்பி விட்டு நன்கு சிவக்க வறுத்து எடுக்கவும்

சுவையான கார முள்ளு முறுக்கு சுவைக்க தயார்.... ரொம்ப ஈஸியாக செய்ய கூடிய டேஸ்டியான முறுக்கு... பச்சை அரிசி மாவில் தான் எல்லோரும் செய்வார்கள், இட்லி அரிசியில் மிக சுவையாக இருக்கும்.. இதே மாவை ரிப்பன் பக்கோடாவாகவும் செய்யலாம்...

## சித்தரகம் நன்மைகள்

உணவுமுறைகள் இப்பொழுது உடலுக்கு தீமையை தரக்கூடியவையாக உள்ளது. ஆனால் நம் முன்னோர்கள் சாப்பிட்டு வந்த ஒவ்வொரு உணவுகளுமே உடலுக்கு நன்மையை மட்டுமின்றி, தொற்று ஏற்படாமல் பார்த்து கொள்ளவும் உதவின. அப்படிப்பட்ட உணவு பொருட்களில் ஒன்று தான் சித்தரத்தை. இது சித்த மருத்துவத்தில் அதிகமாக உபயோகபடுத்தப்பட்டு வருகிறது.

பார்ப்பதற்கு இஞ்சியை போல இருக்கும். இது இஞ்சி, மஞ்சள் போல் கிழங்கு வகையை சேர்ந்தது. சிற்றரத்தை, பேரரத்தை என இரண்டு வகையை உடையது. இதற்கு சீன இஞ்சி என்ற பெயரும் உண்டு. சரி வாங்க சித்தரத்தையின் மருத்துவ குணங்களை படித்து தெரிந்து கொள்ளலாம்.



சத்துக்கள்:

கலோரி 71%

கார்போஹைட்ரேட்- 15.3 கிராம்

புரோட்டின் 1.2 கிராம்

நார்ச்சத்து 2.4

சோடியம் 11.8 மிலி கிராம்

வைட்டமின் சி 5.4 கிராம்

நோய்களை குணப்படுத்த:

சித்தரத்தை பயன்கள்: இந்த சித்தரத்தையை பொடியாக்கி சாப்பிடுவதன் மூலம் உடல் வீக்கம், பாக்டீரியா மற்றும் வைரஸால் ஏற்படும் தொற்றுக்களை குணப்படுத்த முடியும்.

காய்ச்சல், இருமலை சரி செய்ய:

குளிர் மற்றும் மழைக்காலங்களில் ஒரு சிலருக்கு காய்ச்சல், இருமல், சளி போன்றவை வரும். அவை குணமாவதற்கு சித்தரத்தையை பயன்படுத்தலாம். மேலும் நாள்பட்ட நெஞ்சு சளியை குணப்படுத்துவதில் இது மிகவும் உதவியாக உள்ளது.

மூட்டு வலி: வயதானவர்களுக்கு மற்றும் ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு அடிக்கடி மூட்டு வலி, கால் வலி ஏற்படும். இவற்றை குணப்படுத்த சித்தரத்தை ஒரு சிறந்த பொருளாக உள்ளது.

சித்தரத்தை எப்படி சாப்பிடுவது:

சித்தரத்தை எடுத்து கொள்ளும் முறை ஆனது பிரச்சனையை பொறுத்து சாப்பிடும் முறையும் மாறுபடும்.

சித்தரத்தை வேரை அரைத்துசாப்பிடலாம்.

இருமல் பிரச்சனைக்கு வாயில் அடக்கி கொஞ்சம் நேரம் வைத்திருந்து அதன் பிறகு மென்று விழுங்கலாம்.

இருமல் மற்றும் காய்ச்சல் பிரச்சனைக்கு திப்பிலி, மிளகு போன்றவற்றுடன் கலந்து சாப்பிடலாம்.

மூச்சு திணறல் பிரச்சனை உள்ளவர்கள் திப்பிலி, மிளகு, அதிமதுரம் போன்றவற்றுடன் கலந்து சாப்பிட்டால் பலன் சிறந்ததாக இருக்கும்.

## ராஜமௌலியின் படத்தில் நடிக்க மறுத்த முன்னணி நடிகை.. யார் அவர் தெரியுமா?



இந்திய சினிமாவின் பெருமைகளில் ஒன்று இயக்குநர் ராஜமௌலி. நான் ஈ, மகதீரா, பாகுபலி, ஆர்ஆர்ஆர் என பல பிரம்மாண்ட திரைப்படங்களை ராஜமௌலி இயக்கியுள்ளார். அப்படி அவர் இயக்கத்தில் வெளிவந்த படம்தான் ‘மரியாதை ராமண்ணா’.

தெலுங்கில் வெளிவந்த இப்படம் ப்ளாக்பஸ்டர் ஹிட்டானது. இப்படத்தில் சுனில் ஹீரோவாக நடித்திருந்தார். இப்படத்தில் சுனிலுக்கு ஜோடியாக நடிகை சலோனி நடித்திருந்தார். ஆனால், இப்படத்தில் இவருக்கு முன் கதாநாயகியாக நடிக்க பிரபல நடிகை ஒருவர் மறுப்பு தெரிவித்துள்ளார். அவர் யார் என்று உங்களுக்கு தெரியுமா? வேறு யாருமில்லை தென்னிந்திய சினிமாவில் 22 ஆண்டுகளுக்கு மேலாக முன்னணி நடிகையாக வலம் வரும் திரிஷாதான்.

ராஜமௌலி இப்படத்தில் திரிஷா அல்லது அனுஷ்கா கதாநாயகியாக நடித்தால் பொருத்தமாக இருப்பார்கள் என நினைத்துள்ளார். தயாரிப்பாளர்கள் திரிஷாவை அணுகியதாக கூறப்படுகிறது. ஆனால், அவர் இந்த படத்தை நிராகரித்துள்ளார். அவர் ஏற்கனவே பல படங்களில் பிஸியாக நடித்து வந்த காரணத்தினால் இப்படத்தில் நடிக்க மறுத்ததாக கூறப்படுகிறது. இருப்பினும் இந்த தகவல் எந்த அளவிற்கு உண்மை என தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



இன்ஸ்டா தளத்தில் போட்டோவை வெளியிடும் நடிகை அஞ்சு. தற்போது மாடர்ன் லுக்கில் வலம் வரும் அசத்தல் ஸ்டில்ஸ். இதோ,




## ராஜமௌலியின் வாரணாசி படத்தில் நடிக்க பிரியங்கா சோப்ரா வாங்கியுள்ள சம்பளம்... எவ்வளவு தெரியுமா?

தமிழில் அறிமுகமாகி பின் பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வந்து, இன்று ஹாலிவுட் திரையுலகில் தனக்கென்று தனி இடத்தை உருவாக்கியுள்ளார் பிரியங்கா சோப்ரா.

இந்த ஆண்டு இவர் நடிப்பில் ஆங்கிலத்தில் வெளிவந்த ஹெட்ஸ் ஆஃப் ஸ்டேட் படம் நல்ல வரவேற்பை பெற்றது. இதை தொடர்ந்து இரண்டு ஹாலிவுட் படம் மற்றும் ஒரு இந்திய திரைப்படத்தை கைவசம் வைத்துள்ளார். அந்த இந்திய திரைப்படம்தான் ராஜமௌலியின் வாரணாசி.

பிரம்மாண்ட பட்ஜெட்டில் உருவாகி வரும் வாரணாசி படத்தின் தலைப்பு நேற்று மாலை வெளியிடப்பட்டது. மந்தாகினி என்கிற கதாபாத்திரத்தில் ஆக்ஷன் ஹீரோயினாக மகேஷ் பாபு, பிரித்விராஜ் உடன் இணைந்து பிரியங்கா சோப்ரா நடிக்கிறார்.



சமீபத்தில் இவருடைய போஸ்டர் கூட படக்குழுவினர் வெளியிட்டு இருந்தனர்.

இந்த நிலையில், வாரணாசி படத்தில் நடிப்பதற்காக நடிகை பிரியங்கா சோப்ரா வாங்கியுள்ள சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படத்தில் நடிப்பதற்காக பிரியங்கா ரூ. 30 கோடி சம்பளம் வாங்கியுள்ளாராம். இதன் மூலம் இந்திய சினிமாவில் அதிக சம்பளம் வாங்கும் நடிகை என்கிற சாதனையை படைத்துள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com